## "உயிர் உள்ள நீரை" தயாரிப்பது எவ்வாறு?

**நிலை: 1**



100 கிராம் மாட்டுச் சாணத்தை 14.5 லிட்டர் புதிதாக எடுக்கப்பட்ட கடல் நீரில் கரைத்து ஒரு துணியால் வடிக்கட்டி. அதை ஒரு வாளியில் நிரப்பி வைத்துக் கொள்ள வேண்டும்.

**நிலை: 2**

10 கிராம் ஈஸ்ட்டை எடுத்துக்கொண்டு அதை அரை லிட்டர் கடல் தண்ணீரில் கரைத்து அதை முன்பு கரைத்து வைத்துள்ள வாளியில் ஊற்றி விட வேண்டும்.



பின்பு வாளியின் வாயை ஒரு துணியால் நன்கு இறுக்கிக் கட்டி வைத்து விட வேண்டும். அதை நமது வீட்டின் அறையில் உள்ள தட்ப வெப்ப நிலையில் அப்படியே ஏழு நாட்கள் வைத்து விட வேண்டும். எட்டாவது நாள் எடுத்து உபயோகிக்க ஆரம்பித்து விடலாம்.

## கடல் தண்ணீரில் மாட்டுச் சாணம், ஈஸ்ட் போடும் போது என்ன மாற்றம் நடைபெறுகிறது?

கடல் தண்ணீரில் நிறைய நுண்ணுயிரிகள், நீல பச்சைப்பாசி, புரோகேரியாட்ஸ், யூகேரியாட்ஸ், நிறைய காணப்படுகின்றன.